[8th August 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பிரதம மந்திரி அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதைக் கனம் அங்கத்தினர் புரிந்துகொள்ள வில்லை. பிரதம மந்திரி அவர்கள் அப்படி ஒன்றும் சொல்லவில்லை. ஜனநாயகத்தில் என்ன நடக்க வேண்டும், என்ன டெமான்ஸ்ட்ரேஷன் செய்வது, எதை அனுமதிப்பது என்பது இந்த அரசாங்கத்திற்குத் தெரியும்.

விற்பனை வரி விலக்கு

* 205 **கேள்வி.—திரு. ம. கமலநாதன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கோதுமை, கோதுமைப் பண்டங்கள், பயறு, பருப்பு வகைகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

* 206 **கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உணவு உற்பத்தியைப் பெருக்க சலுகை தரும் வகையில், விவசாயிகளுக்கு உபயோகப்படும் கடலைப் பிண்ணாக்குக்கான விற்பனை வரியை எடுத்துவிட அல்லது குறைக்க, அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

Neyveli Fertiliser Project

* 207 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) when the Neyveli Fertiliser Project is expected to start production;

(*b*) the cost involved thereof;

(*c*) the nature and extent of foreign aid and collaboration received therefor; and

(*d*) the capacity of the said Plant?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Urea Plant of the Neyveli Fertiliser Factory has already been commissioned.

(*b*) The total cost of this scheme is expected to be Rs. 36.19 crores.

(*c*) The total foreign exchange expenditure involved in the project is Rs. 17.98 crores. This was met partly from German Credits of DM 107 million, DM 82 million and DM 30 million.

(*d*) The full production capacity of the Fertiliser plant is 1,52,000 tonnes of urea per annum with a nitrogen content of 46 per cent.

8th August 1966]

திரு. வை. சங்கரன் : நெய்வேலி யூரியா உரத் தொழிற்சாலையில் பூரண அளவு உற்பத்தி தொடங்கிவிட்டதா ? அதில் உற்பத்தியாகக் கூடிய உரம் அத்தனையும் 'ஸென்ட்ரல்பூல்'-இல் சேர்க்கப்பட்டு, பிறகு தான் நமக்கு ஒதுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இன்னும் பூரண உற்பத்தி ஏற்படவில்லை. உற்பத்தியெல்லாம் 'ஸென்ட்ரல் பூல்'-இல் தான் போகும். எல்லா மாநிலங்களுக்கும் பிரித்துக் கொடுப்பார்கள்.

இயந்திரக் கருவிகள் தொழிற்சாலை

*208 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் மெஷின் கருவிகள் செய்யும் தொழிற்சாலை நிறுவுவது சம்பந்தமாய், சமீபத்தில் ஜப்பானியத் தொழிற் குழுவினர் நமது ராஜ்யத்தில் எந்தெந்த இடங்களைச் சுற்றிப் பார்த்தனர் ?

(இ) அதன்பின், இந்த ராஜ்ய அரசாங்கத்துடன் கலந்து ஏதேனும் முடிவு எடுத்துள்ளனரா ?

(உ) ஆமெனில், அதன் விபரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Japanese team inspected some areas near Madras, Ranipet, Madurai and Tiruchirappalli.

(*b*) & (*c*) The proposal was discussed by the Japanese team with the Madras State Industrial Development Corporation and as a result, the Japanese Machine Tool Trade Association has been asked to prepare a project report. The Madras State Industrial Development Corporation has also applied to the Government of India for the grant of an Industrial licence.

திரு. எம். எஸ். செல்வராஜன் : மெஷின் கருவிகள் செய்யும் தொழிற்சாலை அமைப்பதற்கு அடிப்படையான வசதிகள் என்ன என்ன தேவை ? இந்தக் குழுவினர் மதுரைக்குத் தென் பக்கத்தில் இருக்கும் ஜில்லாக்களை ஏன் பரிசீலனை செய்யவில்லை ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எங்கு வேண்டுமானாலும் செய்யலாம். இப்பொழுது சென்னை, இராணிப்பேட்டை, மதுரை, திருச்சி ஆகிய இந்த நான்கு இடங்களில் பரிசீலனை செய்திருக்கிறார்கள். மற்ற இடங்களில் இடம் இல்லை என்பதல்ல. நான்கு இடங்களில் பரிசீலனை செய்தார்கள். இப்பொழுது எங்கே கொடுப்பது என்பது முடிவு செய்யப்படவேண்டும்.

போல்ட்ஸ், நட்ஸ் தொழிற்சாலை

*209 கேள்வி.—**திரு. நா. இராசாங்கம் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பன்னுருட்டி, குறிஞ்சிப்பாடி, வடலூர் ஆகிய இடங்களில் Bolts and nuts